**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி. R. சுஜாதா, B.Sc., L.L.M.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2024 ம் ஆண்டு நவம்பர் 16 ஆம் நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண். 224/2019**

ஈஸ்வரி

... வாதி

/ எதிர் /

1. கோபால்

2. நகரமன்ற ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி, பொள்ளாச்சி .

... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P.K. மயில்சாமி, அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. N. சுந்தரராஜ் அவர்கள் ஆஜராகியும் , 2 வது பிரதிவாதி தரப்பில் நகர மன்ற ஆணைர் திரு. T. மருதராஜ் அவர்கள் ஆஜராகியும், வாதி அழைத்தும் ஆஜரின்மையினாலும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்:

**தீர்ப்புரை**

வாதியானவர் தாவா "B" ஷெட்யூல் சொத்துகளில் அமையப்பெற்றுள்ள கிணறு மற்றும் அது அமைவிடம் ஆகியவற்றில் உள்ள தமது 1/2 பங்கு பொது பாத்தியதையை அனுபவித்திட யாதொரு இடையூறும் முதல் பிரதிவாதி புரிந்திடாதிருக்க வேண்டி ஒரு நிலையான உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரியும் மற்றும் தாவா "B" ஷெட்யூல் சொத்துக்களில் முதல் பிரதிவாதியானவர் சட்டவிரோதமாக யாதொரு கட்டுமானப்பணியையும் செய்திடாதிருக்க வேண்டி ஒரு நிலையான உறுத்துக்கட்டளை பரிகாம் வழங்கிட கோரியும், தாவா "B" ஷெட்யூல் சொத்துக்களில் உள்ள சேந்து கிணறுவில் உள்ள கிணற்று நீரை இறைத்திடும் படிக்கு இருந்த அமைப்பினை சட்டவிரோதமாக பிரதிவாதியானவர் உடைத்து சேதப்படுத்தி

அப்புறப்படுத்தியதை முன்பு போல சரி செய்து அமைத்துக்கொடுத்திட வேண்டி ஒரு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா "B" ஷெட்யூல் சொத்துக்களில் முதல் பிரதிவாதியானவர் ஏற்கனவே சட்ட விரோதமாக ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பு கட்டுமானப்பணியை அப்புறப்படுத்திட ஆணையிட வேண்டி ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரியும், தாவா "A" ஷெட்யூல் சொத்துக்களுக்கு மேற்புறத்தில் தென்வடலாக அமையப்பெற்றுள்ள சந்து வழியாகச் சென்று பொள்ளாச்சி சார் பதிவாளர் அலுவலக ஆவண எண். 1285/1951 பாக சாசனத்தில் பொது பாத்தியதையாகக் கண்டுள்ள சுவர் பூசிக் கொள்ளும் பாத்தியதையையும் ரிப்பேர் செய்து கொள்ளும் பாத்தியதையையும் வாதி அனுபவித்துக்கொள்வதற்கு இடையூறாக முதல் பிரதிவாதியால் படிக்கட்டு கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளவற்றை பிரதிவாதியானவர் அப்புறப்படுத்திட ஆணையிட வேண்டி வாதிக்கு ஆதரவாக ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட வேண்டுமாயும் மற்றும் தாவா செலவுத்தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Plaintiff called absent. Plaintiff counsel, made representation no instruction from the party. Hence, in the interest of Justice this suit is dismissed for default. No cost.

இவ்வுத்தரவு 2024 ம் வருடம் நவம்பர் திங்கள் 16 ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

ஒப்பம்/- (R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

---

**Fair Judgment**

O.S.No. 224/2019

Additional District Munsif Court

Pollachi

Date : 16.11.2024

---